★ முன்னாள் இந்திய வெளியுறவு அமைச்சர் வெங்கடேஸ்வரன் எச்சரிக்கை

# இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாணப்படாமல் யுத்தம் தொடர்ந்தால் இலங்கை பிளவுபடும்!

வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழர்களுக்கு சுயாட்சி வழங்காதவரையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏதும் இடையாது என இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ஏ. பி. வெங்கடேஸ்வரன் 'வேல்ட் வோச்' என்ற பத்திரிகைக்கு அவர் பேட்டி யளித்தபோது இவ்வாறு கூறியுள்ளார் அப்பேட்டியில் அவர் தெரிவித்துள்ளதாவது ஜே வி. பி இயக்கத்தில் சுமார் நாலாயிரம் உறுப்பினர்களே இருந்தனர் என இலங்கை அரசு கூறுகிறது. ஆனால் இறந்தவர்களின் எண்ணிக்கையோ ஐம்பதாயிரத்துக்கும் அதிகம் அதாவது ஒவ்வொரு ஜே. வி. பி நபருக்கு தலா பத்து அப்பாவிகள் கொல்லப்பட்டுள்ளனர். வடக்கு கிழக்கில் புலிகளுக்கு அதிக மக்களின் செல்வாக்கு உண்டு. ஆனால் ஜே வி பிக்கு அவ்வாறு இல்லை இலங்கையின் சனத்தொகையில் இருபது வீதம் உள்ள தமிழர்கள் இனரீதியில் சிங்களவர்களுடன் வேறுபட்டவர்கள் ஆகையால் புலிகளுடன் — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 4-50

முரசொலி

முரசு 05 ஒலி 56 பிரமோதூத தை 09 (22-01-1991) செவ்வாய்

# உக்கிரமடைந்துவரும் வான்தாக்குதல்!

## குடாநாட்டின் பல பகுதிகள் அதிர்ந்தன

உக்கிரமடைந்து வரும் வான் தாக்குதலால் நேற்று வல்வெட்டித்துறை கொக்குவில், வலிகாமம் வடக்கு, சிறுப்பிட்டி, புத்தூர், தொண்டமானாறு ஆகிய பகுதிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டன. பொதுமக்களுக்குச் சொந்தமான வீடுகளும், பாடசாலைகளும், ஆலயங்களும் பலத்த சேதமடைந்தன.

## கொக்குவிலில் நேற்று மாலை குண்டு வீச்சு; ஒருவர் பலி!

நேற்று மாலை 5 மணிக்கு கொக்குவில் மத்திய பகுதியை வட்டமிட்ட நாலகு மாசெற்றிரக விமானங்கள் ஏழு குண்டுகளை வீசியதோடு, மூர்க்கமான ரொக்கற் தாக்குதல்களையும் நடாத்தின.

இதனால் ஓய்வு பெற்ற அதிபரான ஆர். மகாதேவா (60) உயிரிழந்தார். ஆசிரியையான உமா சுந்தையா (40) ஐங்கரநேசன் (42) மானிடபாய் க. பரமேஸ்வரன் 19 இணுவில் திருமதி எஸ் மகாலிங்கம் (42) ஆசிரியை எஸ். சண்முகநாதன் 49 த செல்வராசா (45) சி. சிவசுப்பிரமணியம் (45) திருமதி மசோபனாதேவி, என். சண்முகம்பிள்ளை ஆகியோர் காயமடைந்தனர்.

பத்துக்கும் மேற்பட்ட வீடுகளும், ஐந்துகடைகளும் பலத்த சேதத்திற்குள்ளாயின.

மஞ்சவனப்பதி முருகன் —04 ஆம் பக்கம் பார்க்க

## புத்தூர், சிறுப்பிட்டியில் ஹெலிகொப்டர் தாக்குதல்

நேற்றுக்காலை புத்தூர், சிறுப்பிட்டி பகுதிகளில் ஹெலிகொப்டரில் இருந்து கலிபர் தாக்குதலும், இடையிடையே கிறினைட் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டன.

இத் தாக்குதலில் கந்தசாமி நகுலேஸ்வரன் என்ற 5 வயது பாலகன் வயிற்றுப் புறத்தில் படுகாயமடைந்தார்.

மற்றொரு தாக்குதலில் 7 மாத கர்ப்பிணிப் பெண்ணான ஆனந்தராஜா சசி —04 ஆம் பக்கம் பார்க்க

## சிறுப்பிட்டியில் நள்ளிரவு அவ்ரோ பீப்பாய் குண்டுவீச்சு

நேற்று முன்தினம் நள்ளிரவு 11 30 மணியளவில் சிறுப்பிட்டிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அவ்ரோ விமான பீப்பாய் குண்டுத் தாக்குதலினால் நால்வர் படுகாயமுற்றனர்.

எஸ். செல்லம்மா (40), எஸ். ஜெயச்செல்வி (13), கே. வசந்தன் (3), கே. நிர்மலா (29) என்போரே படுகாயமுற்றனர்.

இத்தாக்குதலில் செல்லம்மாவின் வீடு தரைமட்டமானது. (ப-11)

## வலிகாமம் வடக்கில் பலவீடுகள் சேதம்

வலிகாமம் வடக்கில் நேற்று காலையும் மாலையும் வான் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மாவிட்டபுரத்தில் இரு பொம்மர்கள் காலையில் குண்டுகளை வீசின. இதனால் மதவடியில் கனகசபை என்பரின் வீடு சேதமடைந்தது.

பன்னாலை, கொல்லங்கலட்டி பகுதிகளில் ஹெலிகப்டரில் இருந்து ஷெல் வீச்சு இடம்பெற்றது. விஜயரத்தினம், செல்வரத்தினம் ஆகியோரின் வீடுகளில் விழுந்த —04 ஆம் பக்கம் பார்க்க

## வல்வையில் தொடர்ந்தும் விமானத்தாக்குதல்

வல்வெட்டித்துறை தொடர்ந்தும் இரண்டாவது நாளாக விமானப்படையின் பலத்த தாக்குதலுக்கு உள்ளானது. காலை 6 மணி முதல் மாலை வரை இத்தாக்குதல் நடைபெற்றது. இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை சில வீடுகள் எரிந்து கொண்டிருந்தன.

வல்வை அரசினர் ஆஸ்பத்திரிப்பகுதி உட்பட தீருவில். வேவில் பிள்ளையார் கோயி —04 ஆம் பக்கம் பார்க்க

## துணுக்காயில் குண்டுவீச்சு 32 வீடுகள், 10 கடைகள்சேதம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி, துணுக்காய் ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் காலை 7 மணி முதல் 9 மணிவரை 3 பொம்மர்கள், 3 அவ்ரோகள், ஒரு வை-12, 1 சியாமேன், 2 ஹெலிகள் ஆகியன தாக்குதலை நடாத்தியுள்ளன

யோகபுரத்தைச் சேர்ந்த த ஜீவகாருண்யம். பு ஞக

## ஆவரங்காலில் இரவு தாக்குதல்

அச்சுவேலிப் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் இரவு ஆவரங்கால் பகுதிக்கு லாண்ட் மாஸ்ரரில் வந்தவர்கள் மீது ஹெலிக்கப்டரில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. (ப-24)

## பலாலியில் இருந்து ஷெல் தாக்குதல

நேற்று பலாலி இராணுவ முகாமிலிருந்து வலி வடக்குப் பகுதிகளான கட்டுவன், ஏழாலை, ஜீளான், தெல்லிப் பழை ஆகிய பகுதிகளை —04 ஆம் பக்கம் பார்க்க

### விடுதலைப் புலிகள் அறிக்கை

## எதிரியின் உளவியல்யுத்தம் அஞ்சி ஓடாதீர்கள்!

ஆயுதப்போராட்டத்தில் முழு நம்பிக்கை வைத்து எமது இயக்கத்திற்கு முழு உற்சாகம் தந்துகொண்டிருக்கும் எம்மக்களை உளவியல் ரீதியாக குழப்பவே தற்போது நடைபெற்று வரும் விமான குண்டு வீச்சுகளாகும்.

இவ்வாறு நேற்றிரவு விடுதலைப் புலிகள் தலைமை செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று வடதமிழீழம் முழுவதும் குடிமனைகள் நோக்கி விமானங்கள் குண்டு வீசுகின் —04 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பிலுள்ள வடபகுதி இளைஞர் போதைவஸ்து பாவனைக்கு அடிமை

கொழும்பில் தற்பொழுது தங்கியுள்ள வடபகுதியைச் சேர்ந்த பல இளைஞர். யுவதிகள் போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஜூன் மாதம் வடக்குக் கிழக்கில் யுத்தம் ஆரம்பித்ததும் பெருமளவான இளைஞர்கள் கொழும்பு சென்றதாலும், வவுனியாவிலிருந்து பலர் திரும்பி வந்ததாலும் —04 ஆம் பக்கம் பார்க்க

## பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் அடுத்த வாரம் கிடைக்கும்

பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பிரதி பண்ணி வழங்கும் பத்திரங்கள் அடுத்த வாரம் யாழ் செயலகத்திற்கு வந்து சேரவுள்ளன.

பிறப்பு, இறப்பு, திருமணப் பத்திரங்களை வழங்குவதற்கான 145 புத்தகங்களை யாழ் செயலக உதவி அர —04 ஆம் பக்கம் பார்க்க

## பெண் மீதும் ராணுவம் வன்முறை

மட்டக்களப்பு பாலடதியிலுள்ள கொக்கட்டிச்சோலை, வெல்லாவெளி ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து நேற்று முன்தினம் வெளியேறிய இராணுவத்தினர் அம்பலாந்துறையைச் சேர்ந்த சின்னத்தம்பி புவனா (40) எனும் திருமணமான பெண்ணை அடித்தும் சித்திரவதை செய்துமுள்ளனர். (71)

## முல்லைக்கு 20 லொறிகளில் உணவுப் பொருட்கள் வரும்

முல்லை மாவட்டத்திற்கு இவ்வாரஇறுதியில் 20லொறிகளில் உணவுப் பொருட்களைக் கொண்டுவர கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதி அளித்துள்ளது.

கடற் கொந்தளிப்பால் கப்பல் மூலம் உணவுப் பொருட்களை எடுத்துவர முடியாத நிலைமை குறித்து முல்லைத்தீவு அரச அதிபர் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டதையடுத்து இம்முடிவு எடுக்கப்பட்டது. (74)

★ அந்தரங்கம் 'ஏமாற்று வழிகளினூடு' அம்பலத்திற்கு வருகிறது!

# உலக வங்கிப் பணத்திற்கு இஸ்ரேலிய நவீன ராடர்கள் கொள்வனவு! மகாவலித் திட்ட வேலைகளைப் பார்வையிட வந்தவர்கள் அரசால் ஏமாற்றப்பட்டனர்

மொசாட் உளவாளியாக இருந்த சைமன்லாகாப் என்பவர் 'ஏமாற்று வழிகளினூடு' என்ற பெயரில் எழுதிய பரபரப்புக்குரிய 371 பக்கங்களைக் கொண்ட புத்தகத்தை விற்பனை செய்யக் கூடாதென நியூயோர்க் நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இத் தீர்ப்பை ஆட்சேபித்து வெளியீட்டாளர்கள் தற்போது மனுச்செய்துள்ளனர். இவ் வழக்கு நடந்த நாட்களில் மட்டும் 50 000 பிரதிகள் விற்பனையாகியுள்ளன.

இப் புத்தகத்தில் இலங்கை தொடர்பான பல விடயங்களும் இடம் பெற்றுள்ளன. உலக வங்கியிடமிருந்தும் ஏனைய வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்தும் பல மில்லியன் டாலர்களை அபிவிருத்தியென்ற போர்வையில் இலங்கை அரசு பெற்று அவற்றுக்கு இஸ்ரேலிடம் நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததாகவும் இந்த மோசடி நடவடிக்கைகளுக்கு இஸ்ரேலிய உளவுப் பிரிவைச் சேர்ந்த அமியார் என்பவரே ஆலோசனையாளராகச் செயற்பட்டதாகவும் இப் புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'இந்த மோசடி தெரியவராமல் இருக்கும் பொருட்டு உலக வங்கியின் நம்பிக்கையைப் பெறும் வகையில் செயற்திட்ட அறிக்கையைத் தயாரிக்க இரு இஸ்ரேலிய பொருளியல், விவசாயத்துறை வல்லுனர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர்.

இத்திட்டத்தின் செயலகம் பற்றி நேரடியாக அறிந்து கொள்வதற்கு உலக வங்கியின் அதிகாரிகள் வருகை தரும் போது பாதுகாப்பின்மையை மிகைப்படுத்திக் கூறி சில குறிப்பிட்ட பாதைகளால் மட்டும் அழைத்துச் சென்று இவர்களின் பார்வைக்காகவே செய்து முடிக்கப்பட்ட திட்டத்தின் சில பகுதிகள் காட்டப் பட்டுவந்தன.

'இலங்கையிலிருந்து 50 பேரைக் கொண்ட இராணுவ அதிகாரிகள் ஒரு தடவை இஸ்ரேலுக்கு வந்தனர். அவர்கள் மூன்று குழுக்களாகப் பிரிந்து செயற்பட்டனர்.

ஒருகுழு பஸ்வண்டிகளையும் விமானங்களையும்மீட்பது எப்படி, கடத்தல்காரர்களை மடக்கிப் பிடிப்பது எப்படி?,

ஹெலிக்கொப்டரிலிருந்து கயிற்றின் உதவியுடன் எப்படி இறங்குவது? போன்ற பயங்கரவாத முறியடிப்புப் பயிற்சிகளில் ஈடுபட்டது.

மறுகுழு இஸ்ரேலிய தயாரிப்பான 'ஊசி' இயந்திரத் துப்பாக்கியையும், குண்டுகள் துளைக்காத கவச உடைகளையும், விசேட கைக்குண்டுகளையும் பெருமளவில் கொள்வனவு செய்தது. இவர்கள் எட்டு'டெவொரா' பீரங்கிப் படகுகளையும் கொள்வனவு செய்தனர். இவை வட பகுதிக் கடற்பகுதியில் தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தவென வாங்கப்பட்டன. மூன்றாவது குழு நவீன 'ராடர்' கருவிகளையும், இதர கடற்படைக்குரிய கருவிகளையும் கொள்வனவு செய்யும் குழுவாக இருந்தது' என இப்புத்தகத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இப்புத்தகத்தில் ஒரு இடத்தில் இஸ்ரேலிய உளவாளி சைமன் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்; நான் பணியாற்றிக் கொண்டிருந்த போது ஒருமுறை ஜனாதிபதிஜெயவர்த்தனாவின்மருமகள் பென்னிரவி ஜயவர்த்தனா இஸ்ரேலுக்கு இரகசிய விஜயமொன்றை மேற் கொண்டிருந்தார். அவரை வழக்கமாக உல்லாசப் பயணிகள் செல்லும் இடங்களுக்கு அழைத்துச் சென்றிருந்தேன். பென்னி பார்வைக்கு ரம்மியமான பெண், உடலமைப்பில் அக்கினோவைப் போல் இருந்தார். அவரது கணவர் ரவி பௌத்தராக இருந்ததால் இவரும் பௌத்தராக மாறியிருந்தார். ஆயினும் அவருக்குக் கிறிஸ்தவ மதத்திலேயே ஈடுபாடு அதிகம் இருந்தது மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நடைமுறைகள் பற்றியும், ஆயுதக் கொள்வனவு பற்றியும் இவைகள் பற்றி அரசாங்க உயர் மட்டத்தில் நடைபெற்றுவந்த இரகசிய விவாதங்கள் பற்றியும் பல விபரங்களை அப்போது பென்னி எனக்குத் தெரிவித்திருந்தார்.'

## பேச்சுவார்த்தை வாய்ப்பை இலங்கை நழுவவிடக்கூடாது என்கிறார் ஜா

இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு ஒன்றினைக் காணும் வாய்ப்பை இலங்கை அரசு நழுவ விட்டுவிடக்கூடாது என்று இலங்கைக்கான இந்தியத்தூதர் திரு. என்.என் ஜா கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் ஒரு தலைப்பட்சப் போர் ஒய்வுப் பிரகடனத்தைக் கருத்திற் கொண்டு அமைதிப் பேச்சுக்கான வாய்ப்பை இலங்கை அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கொழும்பு வார ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியொன்றில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கை—இந்திய உத்தேச நட்புறவு உடன்பாடு பற்றி விவாதிக்க இந்தியா எக்கட்டத்திலும் தயாராக இருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

## மாவீரர் தின - கலை கலாசாரப் போட்டிகளின் முடிவுகள்

ஓவியம்:

கீழ்ப்பிரிவு: 1ஆம் இடம்: த. கமலநாதன், பருத்தித்துறை வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். 2 ஆம் இடம்: செல்வன் நிசங்கன் டிவகலாலா, யாழ் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் 3 ஆம் இடம்: நி. ஆனந்தகௌரி, 3 ஆம் கட்டை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

மத்தியபிரிவு; 1 ஆம் இடம்; செ. ரஜிதா, பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். 2 ஆம் இடம்: இந்திரா சண்முகராஜா, சுதுமலை தெற்கு, மானிப்பாய். 3 ஆம் இடம்: றெஜி இராஜேஸ்வரன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, பெரியதம்பனை, வவுனியா.

மேற்பிரிவு: 1 ஆம் இடம்: நி. கமலாசனி, 3 ஆம் கட்டை நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். 2 ஆம் இடம்: தியாகராஜா தயானந்தம், 'இலட்சுமி பவனம்' பருத்தித்துறை வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். 3 ஆம் இடம்: அ. மங்களாதேவி, மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.

தனியார்பிரிவு: 1 ஆம் இடம்: முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன், கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கருகில், கோண்டாவில் வீதி, இருபாலை, 2 ஆம் இடம்: வாசுகி ஜெகநாதன், 17, கைலாச பிள்ளையார் கோவில் வீதி, யாழ்ப்பாணம் 3 ஆம் இடம்: அன்ரன் றெஜினோல்ட், அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம்.

(வளரும்)

## 'களஞ்சியப் படுத்தல் கட்டாயம்'

''இன்றைய யுத்தகாலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் விழிப்புடன் செயற்பட்டு மக்களுக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் களஞ்சியப்படுத்துவதுடன் உப உணவுப் பொருள் உற்பத்திக்கு ஊக்கம் கொடுத்து உற்பத்திப்பொருட்களுககு நியாய விலை நிர்ணயித்து மக்களைப் பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்ற வேண்டும்''.

சாவகச்சேரி ப.நோ.கூ சங்கத்தில் இடம்பெற்ற தென்மாராட்சிக் கோட்ட கூட்டுறவாளர் ஒன்றிய அங்குரார்ப்பணக் கூட்டத்தில் வி.பு.ம. முன்னணி கூட்டுறவுத் துறைப் பொறுப்பாளர் மயூரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூட்டங்கள் கூடுவதை விட செயற்பாடுகளே முக்கியமானவை என்றார். (66)

## காணிப்பதிவுவேலை ஊழியர் குறைவு

யாழ் மாவட்டக் காணிப் பதிவு அலுவலக உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாக காணிபபதிவு வேலைகளை மேற்கொள்ம் முடியாதுள்ளது.

காணிப்பதிவு வேலைகளை மேற்கொண்டு வந்தவர்களுள இவ் வேலைகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர்களுமான ஐந்து உத்தியோகத்தர்கள் சுய விருப்பத்தில் இளைப்பாறும் திட்டத்தின் கீழ் ஒய்வு பெற்றுள்ளமையால் இவ் வேலைகளை உடனடியாக மேற்கொள்ள முடியாதுள்ளது

31 பேர் கடமையாற்றி வந்த இவ் அலுவலகத்தில் 20 பேர் மட்டுமே தற்போதுள்ளனர்.

பதிவுகளுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட உறுதிகளில் இன்னும் 15 ஆயிரம் உறுதிகள் பதியப்படாத நிலையில் உள்ளன.

இதைவிட யாழ் மாவட்டத்திலுள்ள இருநூறுக்கும் மேற்பட்ட நொத்தாரிசுகளாலும் சட்டத்தரணிகளாலும் எழுதப்பட்ட 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உறுதிகளும் பதிவுக்காகக் காத்திருக்கின்றன. (66)

## 'கலந்தாலோசனை வேணடும்'

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் எல்லைகளை நிர்ணயம் செய்வதற்கு முன்னர் அதனால் ஏற்படக்கூடிய சாதகமானதும், பாதகமானதுமான காரணங்களை அவ்வப் பகுதிகளிலுள்ள பொதுஸ்தாபனங்களைக் கலந்தாலோசனை செய்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய இரண்டு உதவி அரச அதிபர் பிரிவுகளும், மிக விரைவில் மூன்று பிரிவுகளாக மாற்றம் பெறவிருப்பதாக அறியக் கூடியதாயிருப்பதால், இப் பிரிவுகளுக்கான எல்லைகளை நிர்ணயஞ் செய்வதற்கு முன்னர், அதன் சாதக-பாதக காரணங்களை அப் பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சனசமூக நிலையங்கள் போன்ற பொது ஸ்தாபனங்களுடன் கலந்தாலோசனை செய்த பின்னரே தீர்மானஞ் செய்ய வேண்டும் என்று கோரும் வேண்டுகோள் ஒன்றை, யாழ் மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம், யாழ் உதவி அரச அதிபருக்கும், நல்லூர் உதவி அரச அதிபருக்கும், பிரதியீட்டு யாழ் அரசாங்க அதிபர் அவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

புதிய பிரிவுகள் சம்பந்தமான பிரிவீடுகள் செய்யப்பட்டதன் பின்னர் மக்கள் மத்தியிலிருந்து தவறான கருத்துக்கள் முன்வைக்கப்படக் கூடாது என்ற மேலான எண்ணமே இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டதன் முக்கிய நோக்கமாகும் என்றும் அவ் வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (47)

## புதியசுட்டுப்பாடு விலையில் நேற்று விநியோகம்

திருநெல்வேலிச் சந்தியில் மிக நீண்ட கியூவில் நின்று நேற்று மக்கள் மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய் பெற்றனர்.

தலா ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய் இவர்களுக்குப் புதிய கட்டுப்பாட்டு விலையின் கீழ் வழங்கப்பட்டன.


## சிறு விளம்பரம்

### காணவில்லை

எனது ஏசியா சயிக்கிள் No 08AB8332 யாழ் இந்துக் கல்லூரியில் காணாமல் போய்விட்டது. இதைத் தவறுதலாக எடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கும்படி வேண்டுகிறேன். சன்மானம் வழங்கப்படும். அ. மோகன்ராஜா A/L, யாழ் இந்துக் கல்லூரி.
01150

### புத்தகம்

வர்த்தகமும் நிதியும் (1) (உயர்தர வகுபபுக்குரியது) உள்நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம், உற்பத்தி வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள், சந்தைப்படுத்துதல், A/L வர்த்தக மாணவர்களின் உதவி நூல். தொகுப்பு; தேவராஜன் ஜெயராமன் B. Com Hons M. B A. (Delhi விலை ரூபா 48/- வெளியீடு - விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை. யாழ்ப்பாணம்.
01067

### விற்பனைக்கு

மில்க்வைற் திரவ சவர்க்காரம்- வீட்டுச் சலவைக்குச் சிறந்தது. அழுக்கை அகற்றும் தனிச் சக்தி வாய்ந்தது போத்தல் ரூ. 90/- மட்டுமே மொத்தமாக வாங்குவோர்க்கு விசேட கழிவு இணுவில், திருநெல்வேலி, யாழ்நவீன சந்தை அண்ணாகோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது. மில்க்வைற்- யாழ்ப்பாணம். 01152

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 12 - 03 - 1916 மறைவு: 21 - 12 - 1990

### அமரர் சிதம்பரப்பிள்ளை கயவாகு

(2 ஆம் வட்டாரம் குச்சவெளி)

திதி: 22 - 01 - 1991

அன்பின் உருவாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்துடன் எம்மை யெல்லாம் வழி நடத்திச்
சென்ற எங்கள் அன்புத் தெய்வமே!
கண்ணை இமைகாப்பதுபோல் எம்மையெல்லாம்
காத்திரே காலத்தின் கோலத்தால்
காலன் உம்மை அழைத்தது 31 ஆம் நாள் உங்கள்.
பொன்னான நினைவுகள் எம்மை விட்டு என்றுமே
அகலாது

உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள், சகோதரி, சகோதரன்,
குடும்பத்தினர், மைத்துனர் குடும்பத்தினர், மைத்துனி
குடும்பத்தினர் மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புதுக்குடியிருப்பு,
2 ஆம் வட்டாரம்,
முல்லைத்தீவு. 01151

## ஈராக்கிய அதிபர் சூளுரை:

# ஆயுதபலம் மிகச் சிறு அளவே இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ளது

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன், பாக்தாக் வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில், அமெரிக்காவுக்கும் அதனுடன் அணி சேர்ந்த நாடுகளுக்கும் உலகளாவிய ரீதியில் புனித யுத்தத்தை ஆரம்பிக்குமாறு ஈராக்கிய மக்களையும், மற்றும் அரபு நாட்டு மக்களையும் நேற்று முன்தினம் கேட்டுக் கொண்டார்.

இதுவரையிலான யுத்தத்தில் ஈராக் தான் ஆயுத பலத்தில் ஒரு சிறு அளவையே பயன் படுத்தியுள்ளது என்றும் நீண்டகால யுத்தத்திற்கு ஈராக் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

தனது கடற்படைகளும், காலாட் படைகளின் ஆகாயப் படைப்பிரிவும் இன்னமும் பயன்படுத்தப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## யுத்த நிறுத்தத்திற்கு பா. வி. அமைப்பு முயற்சி

ஈராக், அமெரிக்கா மற்றும் அதன் கூட்டு நாடுகளுக்கு இடையே யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வரும் முயற்சியில் இறங்கப் போவதாக பாலஸ்தீன விடுதலை அமைப்பு (பி. எல். ஓ.) அறிவித்துள்ளது.

ஐ நா பாதுகாப்பு வரம்புகளுக்குட்பட்ட யுத்த நிறுத்தத்துக்கான நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக இவ்வமைப்புத் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் ஈராக்கினால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள அமெரிக்க யுத்த விமான ஓட்டிகள் பலரை பாக்தாத் தொலைக் காட்சி மக்களுக்குக் காண்பித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க யுத்த விமானங்கள் சுட்டு வீழ்த்தப் பட்ட போது இவர்கள் சிறைப் பிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## அமெ. - பிரிட்டன் தரைவழித் தாக்குதலை தற்காலிகமாக நிறுத்தும்

ஈராக் மீதான தரைவழித் தாக்குதல்களைச் சிறிது காலம் நிறுத்தி வைக்க அமெரிக்காவும், பிரிட்டனும் உடன்பட்டிருப்பதாக நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டது

தற்போதைய யுத்த சூழ்நிலைபற்றி அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஜோன் மேஜரும் பரிசீலனை செய்த பின்னர் இந்த உடன்பாடு எடுக்கப்பட்டது.

இதற்கிடையில் பல்நாட்டு நேசபடைகள் ஈராக் மீதான வான்வெளித் தாக்குதல்களைத் தொடர்ந்து நடாத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதனிடையே அமெரிக்கா தலைமையிலான படைகளுக்கு எதிரான தாக்குதல் தொடரும் என்று ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன் கூறியுள்ளார் என பாக்தாத் தகவல் ஒன்று கூறுகிறது.

## இளைப்பாறிய ஆசிரியரின் சேவை பெற அரசு முடிவு

சுய விருப்பின் பேரில் ஓய்வுபெறும் திட்டத்தை அறிவித்துள்ள அரசாங்கம் இப்போது ஏற்கனவே ஓய்வு பெற்ற ஆசிரியர்களை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இத் தகவலை கல்வி, உயர் கல்வியமைச்சர் லலித் அத்துலத் முதலி கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் நேற்று வெளியிட்டார்.

"ஆசிரியர் பற்றாக்குறை எதிர் நோக்கப்பட்டால் இளைப்பாறிய ஆசிரியர்களின் பணி பெறப்படும்" என்றார் அவர். இந் நிகழ்ச்சியில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவும் சமுகமளித்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது அரசாங்கத்தின் சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தினால் ஆயிரக்கணக்கில் ஆசிரியர்கள் விண்ணப்பித்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

## தீவுப்பகுதிப் பாடசாலை அதிபர்கள் சங்கம் உதயம்

தீவுப்பகுதிப் பாடசாலைகளில் அதிபர்களாகக் கடமையாற்றி வருபவர்கள் ஒன்றிணைந்து தங்களுக்கென ஒரு அதிபர் சங்கமொன்றினை அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளனர்.

இவ்வாறு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட சங்கத்தின் தலைவராகத் திரு பொ. கேதாரநாதன் (வேலணை கொத்தணி அதிபர்), செயலாளராகத் திரு. சபாரெத்தினம், பொருளாளராக திரு. சு. கலாதரனும் தெரிவாகியுள்ளனர்.

இதற்கென நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (19)

## முகமூடியை கைவிட்டு கொள்ளையர் ஓட்டம்

கொள்ளையர் முகமூடியை விட்டுச்சென்ற சம்பவம் ஒன்று ராகமயில் நிகழ்ந்துள்ளது.

கொழும்பில் தமிழ் பத்திரிகை நிறுவனத்தில் கடமை புரியும் ஊழியர் ஒருவரின் வீட்டுக்குள் அதிகாலை புகுந்த முகமூடிதரித்த ஆயுதபாணிக் கோஷ்டி ஒன்று வீட்டிலுள்ளோர் அலறியதும் முகமூடிகளை கைவிட்டு ஓடித்தப்பியதாம்.

## பாஷையூர் அணி சாம்பியனானது

சமீபத்தில் இயற்கை எய்திய அமரர் ஈ. கே. குமரையா அவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக அரியாலை விளையாட்டுக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளின் ஓர் அங்கமாக, கடந்த சனிக்கிழமை அரியாலை விளையாட்டரங்கில் நடைபெற்ற உதைப்பந்தாட்டப் போட்டியில் பாஷையூர் சென் அந்தனீஸ் விளையாட்டுக் கழகம் சாம்பியனானது.

முதற் போட்டியில் யாழ் கிறின் பீல்ட் அணியைச் சென் அந்தனீஸ் அணி 3க்குப் பூஜ்யம் என்ற கோல் அடிப்படையில் தோற்கடித்தது; இரண்டாவதுபோட்டியில் பொற்பதி அணியை அரியாலை விளையாட்டுக் கழக அணி 2 க்குப் பூஜ்யம் என்ற கோல் கணக்கில தோற்கடித்தது.

வெகு விறுவிறுப்பாக இருந்த இறுதியாட்டத்தில் சென் அந்தனீஸ் அணி அரியாலை அணியை 2 க்கு ஒன்று என்ற கோல் கணக்கில் வென்றது. அரியாலை அணி கோல் காப்பு வீரர் எஸ். மோகனதாஸ் அற்புதமாகப் பல பந்துகளை வெகு சாதுரியமாகத் தடுத்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றார்.

இப்போட்டிகட்கு நடுவர்களாக:- ஏ தேவராசா, எம். பிறான்சிஸ் ஜீ. எம் செபஸ்தியாம்பிள்ளை ஆகியோரும், உதவி நடுவர்களாக:- பீ ஆர். தம்பிநாயகம், கப்ரின் டி ஏ. எம் குணசிங்கம், சீ சூரிய குமார் ஆகியோரும் கடமையாற்றினார்கள். (16)

## கடன் விண்ணப்பம் கவனிப்பாரற்ற நிலையில்

சகல கோட்டங்களிலுமிருந்து அனுப்பப்பட்ட ஆசிரியர்களின் 6 மாத 2 வருடக் கடன் விண்ணப்பப் பத்திரங்கள் யாழ் கல்விப் பணிமனையில் எதுவித நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

வடகிழக்கு மாகாணக்கல்வி அமைச்சில் இருந்து வந்த உத்தியோகப் பற்றற்ற அறிவிப்பின்படி கடன் விண்ணப்பப் பத்திரங்களுக்குரிய வவுச்சர்களுக்கு 3 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளதனால் இவை அப்படியே வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இவ் விண்ணப்பங்கள் இரண்டு ரூபாவுக்கான முத்திரையே ஒட்டப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது (ப-17)

# இந்தியப் பிரதமர் சந்திரசேகர் ஜெயலலிதாவுக்கு சமாதானம் சொன்னார்

'காஞ்சிப் பெரியவரைத் தரிசிப்பதைவிட ஜெயலலிதாவைச் சந்திப்பதே பிரதமர் வருகையின் அவசர நோக்கம்! ஆனால், நேரடியாக ஜெயலலிதாவை மட்டும் பார்த்தால் நன்றாக இருக்காது என்றே காஞ்சி விஜயமும் சேர்க்கப்பட்டதாக அரசியல் வட்டாரத்தில் 'பேச்சு''.

''ஜெயலலிதாவைச் சந்திக்க அவ்வளவு அவசரப்பட்டுப் பறந்து வருவானேன்?'

'வாழப்பாடியார்தான் காரணமாம்! 'தமிழகத்தில் இனி கூட்டணி ஆட்சிதான் .. யார் முதல்வர் என்பதை ராஜீவ்காந்தியே முடிவு செய்வார்'' என்று வாழப்பாடியார் அண்மையில் கூறினார். இதனால் ஜெயலலிதாவுக்குக் கடும் கோபம் ஏற்பட்டது கடந்த பதினைந்து நாட்களாகப் பெங்களூர் ஜெயமகால் எக்ஸ்டென்ஷனில் உள்ள தனது சொந்த பங்களாவில் இருந்த ஜெயலிதா, அங்கிருந்து டெல்லியில் உள்ள சுப்பிரமணியசுவாமியுடன் தொடர்பு கொண்டு தனது அதிருப்தியை மேலிடங்களுக்குத் தெரிவிக்கச் செய்தார். சமாதானப்படுத்த ஜெயலலிதாவை டெல்லிக்கு அழைத்தனர்! டெல்லிக்கு வர மறுத்துவிட்டார் ஜெயலலிதா! டெலிபோனில் ராஜீவ் காந்தியுடனேயே அவர் பேச மறுத்து விட்டதாகவும் ஒரு தகவல்!'

'காங்கிரஸ் மேலிடத்துக்குத் தர்மசங்கடமான நிலை. எனவே ஜெயலலிதாவைச் சமாதானப்படுத்துவதே சந்திரசேகர் வருகையின் பிரதான நோக்கம். அனுப்பி வைத்தவர் ராஜீவ்காந்திதான். முதலில் சுப்பிரமணிய சுவாமியின் ஆலோசனையின் பேரில் ராஜீவ்காந்தியே சென்னைக்கு வருவதாக இருந்ததாம்! சமீபத்தில்தான் ஒரு முறை சென்னைக்கு வந்து ஜெயலலிதாவைப்பார்த்திருப்பதால், மீண்டும் ஒரு சந்திப்பு சரியாக இருக்காது என்று அவர் கருதினார்! ஆகவே ராஜீவ் வேண்டுகோளின்படி பிரதமர் வந்தார்!' சந்திப்பில் ஜெயலலிதாவைப் பிரதமர் சமாதானப்படுத்தி விட்டார்! 'தமிழ்நாட்டின் அடுத்த முதலமைச்சர் நீங்கள் தான்' என்று தன் சார்பாகவும் ராஜீவ் சார்பாகவும் அவர் உறுதி அளித்துவிட்டாராம்! ஜெயலலிதாவுக்கு மிகுந்த திருப்தி ஏற்பட்டுவிட்டது

'தி. மு க. அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும்' என்று ஜெயலலிதா தனது அடுத்த கோரிக்கையை ஆரம்பித்தார். உடனே குறுக்கிட்ட சந்திரசேகர், 'டிஸ்மிஸ் செய்ய நான் தயார்... எந்த அடிப்படையில் டிஸ்மிஸ் செய்வது .. அதற்காகத்தான் அட்டர்னி ஜெனரால் ஜி ராமசாமியை இங்கு வரச் சொன்னேன்! அவருடன் பேசுங்கள்...! பெரும்பான்மையுடன் உள்ள அரசை டிஸ்மிஸ் செய்வது எளிதல்ல! அதற்கான வலுவான காரணங்களுடன் என்னை டெல்லியில் சந்தியுங்கள் .அப்போது பார்ப்போம். இன்னொரு விஷயம்! ஜனாதிபதி தனது மாநிலத்தில் வீணாக அசம்பாவிதங்கள் நடப்பதை விரும்பவில்லை என்றார்!'

'சந்திரசேகர் இப்படிச் சொன்ன பிறகுதான் ஜனாதிபதியிடம் தி. மு க அரசை டிஸ்மிஸ் செய்யக் கோரும் மகஜர் தருவதை ஜெயலலிதா கைவிட்டார். இருந்தாலும் ஜனாதிபதியிடம் ஜெயலலிதா தி மு. க மீது பல புகார்களைக் கூறினார். எல்லாவற்றையும் ஜனாதிபதியுடன் இருந்த செயலாளர் குறிப்பெடுத்துக் கொண்டார்.

'ஆனால் ஜெயலலிதா தி மு.க. அரசை டிஸ்மிஸ் செய்யாமல் விடப்போவதில்லை என்று சபதமே செய்துவிட்டார்.

தி மு க. ஆட்சியை ஏன் டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்று பொதுக் கூட்டங்களில் பேச இருக்கிறார்.

'பாராளுமன்றக் கூட்டம் முடிந்ததும் பட்ஜெட் கூட்டத் தொடருக்குள் தி மு க அரசு டிஸ்மிஸ் செய்யப்படும் என்று அ. தி மு.க. வட்டாரம் நம்புகிறது 'எப்படியும் ஏப்ரல் மாதம் தேர்தல் வரும், தயாராய் இருங்கள்' என்று டெல்லியில் இருந்து தகவல் வந்திருக்கிறது. அதனால்தான் ஜெயலலிதா இவ்வளவு சுறுசுறுப்புடன் செயற்படுகிறார்.

## சிட்னியில் சிவபஜனை!

பதினேழு வருடங்களுக்கு முன் இந்தியாவுக்குச்சுற்றுலா வந்தவர் அவுஸ்ரேலிய இளைஞர் ஒருவர் இந்திய கலாசார, இந்துசமய தத்துவங்களால் கவரப்பட்ட அவர், தன் நாட்டுக்குத் திரும்பாமல் இந்தியா முழுவதும் சுற்றினார். வட இந்தியாவிலுள்ள பல புராதன தலங்களுக்கும் சென்றார். மது அருந்துவதை நிறுத்தினார். சைவ உணவையே சாப்பிட்டார்!

அவுஸ்திரேலியா திரும்பிய அவர், சிவபக்தராகித் தன் பெயரை 'இந்திய பாரதி' என்று மாற்றிக் கொண்டார்.

மரக்கிளைகளாலே ஓர் அதிசய இசைக் கருவியைக் கண்டுபிடித்துள்ளார் இந்திய பாரதி அந்த இசைக் கருவியோடு சிட்னி வீதிகளில் சிவபஜனை செய்கிறார். சமீபத்தில் யப்பானுக்கும் சென்று வந்துள்ளார் இவர்'

## கட்டுப்பாடு

அரச திணைக்களங்களுக்கான கட்டிட ஒப்பந்தங்கள் கட்டிட நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் கட்டிட நிர்மாணம் சம்பந்தமாக பதிவு செய்துகொண்ட இலங்கை நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் அங்கத்தவர்களாகவுள்ள ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே இனி மேல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

இப்புதிய முடிவுக்கமைய பழைய திட்டத்தின் கீழ் இருந்த ஒப்பந்தக்காரர்களின் பதிவுகள் யாவும் இம்மாதம் ஆரம்பம் முதல் செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ளன. (ப-17)

## ஆனையிறவு கடலேரியில் நீர்வற்றுகிறது

அண்மையில் பெய்த மழை நீரினால்நிறைந்திருந்த ஆனையிறவுக்கடலேரி நீர்சில நாட்களாக சுண்டிக்குளத்திற்கு அண்மையிலுள்ள நல்ல தண்ணீர்த் தொடுவாய் வழியாக பெருங்கடலுக்கு(வங்காளவிரிகுடா)பாய்ந்து செல்வதினால் கடலேரியின் நீர்மட்டம்வெகுவாகக் குறைந்துள்ளது.

இக்கரையிலிருந்து அக்கரைக்கு நடந்து செல்லக்கூடிய அளவுக்கு கொம்படி வெட்டைப் பாதையில் நீர் குறைந்துள்ளது. (18)

# தரையில் நடைபெறவுள்ள தாக்குதலுக்கு அமெரிக்கா தயாராகும்படி ஈராக் எச்சரிக்கை

தரையில் நடைபெறவுள்ள கடுமையான எதிர்த்தாக்குதலுக்கு அமெரிக்கா மற்றும் நேச அணி ராணுவத்தினர் தயாராக இருக்கும்படி ஈராக் எச்சரித்துள்ளது.

**தாக்குதலுக்கு தயாராகும்படி ஈராக்**

ஈராக் இன்னமும் வளைகுடாவில் தனது பலத்தை காட்டவில்லை. அதற்கான காலமும்தொலைவில் இல்லை ஈராக் தாக்க ஆரம்பிக்கும் போது அதை எதிர்கொள்ள சகல எதிரிகளும் தயாராக இருக்குமாறும் ஈராக் தெரிவித்துள்ளது.

**விமானிகள் கேடயமாக**

தம்மிடம் அகப்பட்டுக் கொண்ட எதிரிநாட்டு விமானிகளை தாம் மனித கேடயமாக பயன் படுத்தவுள்ளதாகவும் இதற்கென இவர்கள் சகல கேந்திர இலக்குகளில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் ஈராக் வானொலி தெரிவித்துள்ளது.

**நீர்மூழ்கியிலிருந்து ஏவுகணை**

நேற்று செங்கடலில் நிலை கொண்டிருந்த அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்களில் இருந்து ஈராக் நோக்கி கடும் ஏவுகணைத்தாக்குதல் நடாத்தப்பட்டது.

தொலைவில் இருந்து கொண்டே இயக்கக் கூடிய சிளான் ரக ஏவுகணைகளே இத்தாக்குதலுக்கு பயன்பட்டது. இதனால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை

**ஏவுகணைகள் அழிக்கப்பட்டன**

இதேவேளை சவுதி அரேபிய தலைநகர் ரியாட்டை நோக்கி ஈராக் ஏவிய ஒன்பது ஸ்காட் ஏவுகணைகளை நடுவானிலேயே பற்றியாட் ரக ஏவுகணை எதிர்ப்புஏவுகணையால் அழித்து விட்டதாக அமெரிக்க ராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**இஸ்ரேலுக்கு பாதுகாப்பு**

இஸ்ரேலின் பாதுகாப்பு கருதி அமெரிக்கா அந்நாட்டுக்கு விமானந் தாங்கி கப்பலொன்றை அனுப்பியுள்ளது.

**ரியாட் நகர் பலத்த சேதம்**

இதேவேளை சவுதி மீது ஈராக் நடத்திய ஏவுகணை தாக்குதலில் தலைநகர்ரியாட் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் பல கார்கள் தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. மேலும் ஏவுகணைத் தாக்குதல் நடக்கலாம் என அச்சம் காரணமாக பல நகரவாசிகள் ரியாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

**ரஷ்யா உளவு பார்க்கிறது?**

வளைகுடாவில் நிலை கொண்டுள்ள அமெரிக்காவின் படையினரின் ஆயுத விபரம் மற்றும் நடமாட்டம் குறித்து ரஷ்யா புதியரகஆயுதங்களை உற்பத்தி செய்யலாம் என அமெரிக்கவின் ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

---

**இனப்பிரச்சினைக்கு...**

ஜே. வி. பியினருக்காகஅணுகுமுறைகளைக் கைக்கொள்வது சாத்தியமாகாது.

இந்த யுத்தம் தொடருமானால் இலங்கை பிளவுபடுவதே விளைவாக அமையும் புத்திசாதுர்யம் மிக்க தலைமைப்பீடமானது இவ்வுண்மையை மனதிற்கொண்டு மேலும் காலம் தாழ்த்தாமல் பரஸ்பர நம்பிக்கையினை கட்டி எழுப்புவதற்கானமுயற்சியை ஆரம்பிக்க வேண்டும். இந்தியாவின் கோழைத்தனமான அமைதியான போக்கானது தமிழர்கள் அழித்தொழிக்கப்படுவதை ஊக்குவிப்பதாகவும் அமைதல் கூடாது என்றார்.

---

**பலாலியில்**

நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது வீடுகள் சேதமடைந்தன. (ப-11)

---

**புத்தூர்—**

கலா (19) கையில் படுகாயமடைந்தார் சில கால் நடைகளும் இறந்தன.

சிறுப்பிட்டியில் என். ஜெயந்தி (19) என்ற யுவதிக்கு காலில் படுகாயம் ஏற்பட்டது சில வீடுகளும் சேதமடைந்தன (ப 11)

---

**வலிகாமம்—**

ஷெல்கள் வெடிக்கவில்லை.

குப்பிளானில் நான்கு பீப்பாக் குண்டுகள் வை-12 விமானத்தில் இருந்து வீசப்பட்டன- பல வீடுகள் இங்கு சேதமடைந்தன.

மீண்டும் மாலை 3.30 மணியளவில் புன்னாலைக் கட்டுவன் நாச்சிமார் கோயிலடிப்பகுதியில் இரு பொம்மர்கள்வந்து நான்கு குண்டுகளை வீசியதால் பல வீடுகள் சேதமடைந்தன. (48)

---

## நிதியுதவி

யாழ் பல்கலைக்கழக தென் தமிழீழமாணவர்களுக்கு சாவகச்சேரி வர்த்தகர் சங்கம் 25000 ரூபாநிதியினை துணைவேந்தர் நிதியத்திற்கு வழங்கியுள்ளது.

இந்நிதியினை பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. கே. பரமேஸ்வரன் பெற்றுக் கொண்டார் (ப-11)

---

**துணுக்காய்...**

தாஸ் ஆகியோரின் வீடுகள் உட்பட 32 வீடுகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், 2 கோயில்கள் என்பனவும் சேதமடைந்தன.

துணுக்காயில் சோ சிவகுகநாதன், ச. நீதிராசா, இ. சண்முகம் ஆகியோரின் கடைகள் உட்பட 10 கடைகளும், மல்லாவியில் வைத்திய விடுதி மூவேந்தர் கிராம முன்னேற்றச் சங்கம் என்பனவும் சேதமடைந்தன. (71)

---

**வல்வையில்**

லடி, வல்வைச் சந்தி, கொத்தியால், குச்சம், வேம்படி ஆகிய பகுதிகள் குண்டு வீசித் தாக்கப்பட்டன.

சிவகுரு வித்தியாசாலை, வல்வை அம்மன் கோயில், சிவன் கோயில், புனித செபஸ்தியார் ஆலயம் ஆகியவை முற்றாகச் சேதமடைந்தன. நெடியகாடு மகளிர் வித்தியாலயம், மீன் சந்தை, பேக்கரி உட்பட கடைகளும் ஏராளமான வீடுகளும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (39, 71)

---

**கொழும்பிலுள்ள...**

கொழும்பில் பெருமளவிலான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் தங்கியுள்ளனர்.

வெளிநாடுகளிலுள்ள தமது உறவினர்கள் அனுப்பும் பணத்தை இவர்கள் போதை வஸ்துகளுக்கு செலவழிப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (70)

---

## அத்தியாவசிய பொருட்களுக்கு நீண்ட கியூ

நேற்றுமுதல் குடாநாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு விலைக்கட்டுப்பாடு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரால் கொண்டு வந்ததையடுத்து திருநெல்வேலி, சுன்னாகம், சாவகச்சேரிப் பகுதியில் மக்கள் மண்ணெண்ணை, தேங்காய்எண்ணை மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்காக நீண்ட கியூ நின்றதைக்காணக் கூடியதாக இருந்தது (ப - 11)

---

**எதிரியின்...**

றன. இதன்விளைவாக வடமராட்சியிலிருந்து தென்மராட்சிக்கும், தென்மராட்சியிலிருந்து, வடமராட்சிக்கும் மக்கள் இடம்பெயர்வதில் அர்த்தமில்லை கோட்டை. மாங்குளம் போன்ற தனது முகாம்களை பாதுகாக்க முடியாத நிலையில் எதிரி வல்வெட்டித்துறையில் ஓர் நகர்வை செய்வதோ, முகாமை அமைப்பதோ இயலாதகாரியம்.

எதிரியின் உளவியல் யுத்தத்திற்கு அஞ்சி ஓடாது ஒவ்வொருவரும் தமது வீட்டினுள்ளேயே பதுங்குகுழி அமைத்து எம்மை காத்து கொள்வதுடன் எதிரியின் முயற்சியையும் முறியடிக்க வேண்டும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**பிறப்பு**

சாங்க அதிபர் திரு. எஸ். ஐ நித்தியராஜ் கொழும்பில் பதிவாளர் நாயகத்திடமிருந்து பெற்று கப்பல் மூலம் அனுப்பியுள்ளார்.

இவை கிடைக்கப்பெற்றதும் குறைந்தது எண்ணாயிரம் விண்ணப்பதாரர்களுக்கு இவ்வத்தாட்சிப்பத்திரங்களை வழங்கக் கூடியதாக விருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. (77)

---

**கொக்குவில்...**

ஆலயத்திற்கு மூன் உள்ள மரம் ஒன்றும் முறிந்து விழுந்தது இக்கோயிலுக்கு எவ்வித சேதமும் நிகழவில்லை.

இத் தாக்குதலையடுத்து செஞ்சிலுவைச் சங்க உடன் உதவும் பகுதிப் பிரிவினர் ஸ்தலத்துக்குச் சென்று காயமடைந்தவர்களை அம்புலன்ஸ் மூலம் கொண்டு சென்றனர். (12,ப14,74,66, 71

---

## கட்டுத்துவக்கு வெடிவிபத்து வெளிமாவட்டங்களில் அதிகரிப்பு

கடந்த மூன்று மாதகாலத்தில் மட்டும் 22 பேர் கட்டுத்துவக்கு வெடித்து காயப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக வைத்தியசாலைக் குறிப்பேடுகள தகவல் தருகின்றன.

இவ்வாறான காயங்கள் பெரும் பாலும் வெளிமாவட்டங்களிலேயே (மூத்தையன்கட்டு, முல்லைத்தீவு, கிளிநொச்சி) இடம் பெறுகின்றன.

இக் கட்டுத்துவக்கு வெடின ஒள்ளாகி பருத்தவ மகையில் அனுமதிக்கப்பட்டவர்களுள் இருவரே இறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது (ப-11)

## யாழ் மாவட்ட மதியபோசன உணவுமுத்திரை லங்காசிறியில்

யாழ் மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இரண்டு லட்சத்து 25 ஆயிரம் மதியபோசனத்திற்கான முத்திரைகள் இங்கு கொண்டு வரப்படுகின்றன.

யாழ் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் கொழும்பில் உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடாத்தி இந்த முத்திரைகளைப் பெற்று லங்காசிறி உணவுக் கப்பலில் சேர்ப்பித்துள்ளார்

இதேவேளை மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களின் ஒரு தொகுதியும் இக் கப்பலில் கொண்டுவரப்படுவதாக அரச அதிபர் தெரிவித்தார். (66

## வெளிநோயாளர் பிரிவில் நோயாளிகள் அதிகரிப்பு வைத்தியர் வருகை குறைவு

நீண்டகால இடைவெளிகளின் பின்னர் யாழ் போதனா வைத்தியசாலையில் 127 பேர் வார்ட்டுகளில் நேற்றுமட்டும் அனுமதிக்கப்பட்டனர் இதில் 64 பேர் சத்திரசிகிச்சைப் பிரிவிற்கு உட்படுத்தப்பட்டவர்களாவர்.

இவர்களில் அதிகமானோர் இராணுவத் தாக்குதல்களினாலும், மற்றும் பல்வேறு நோய்களினாலும் (மலேரியா, வயிற்றோட்டம்)அனுமதிக்கப்பட்டவர்களாவர். நேற்று வெளிநோயாளர் பகுதியில் நோயாளிகள் தொகை வெகுவாக அதிகரித்தது எனினும் டாக்டர்களின் வருகையின்மை குறைவாக இருந்ததனால் நோயாளிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

குறிப்பிட்ட சில நோயாளிகள் அவசரசிகிச்சைப் பிரிவில் காட்டி மருந்தெடுத்தனர். (ப-11)

## இரவு நேரம் நெற்கதிர்கள் கொய்யப்பட்டுள்ளன

நள்ளிரவு நேரத்தில் திருடர்கள் வயலில் முற்றி விளைந்திருந்த நெற்கதிர்களைக் கொய்து கொண்டு சென்றுள்ளனர்

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமியார் கோவிலுக்கு முன்பாகவுள்ள வயற் பிரதேசத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. (12)

## விவசாயக் கல்லூரியை கிளிநொச்சிக்கு மாற்ற ஏற்பாடு

வவுனியாவில் இயங்கிவரும் விவசாயக் கல்லூரியை கிளிநொச்சிக்குத் தற்காலிகமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

வவுனியாவில் இராணுவ நடவடிக்கை அடிக்கடி இடம் பெறுவதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக சம்பந்தப் பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

## நவம்பர் மாத ஒய்வூதியம் கட்டுநிதி கிடைத்தது

யாழ் செயலக ஒய்வூதியக் கொடுப்பனவுகளுக்காக நான்கு கோடி ரூபா கட்டுநிதி கிடைத்துள்ளது. இந்நிதியை நவம்பர் மாத ஒய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதே வேளை அக்டோபர் மாதத்திற்குரிய பென்சன் வவுச்சர்களும் காசோலைகளும் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

நவமபர் மாத வவுச்சர்கள் அடுத்த கிழமை சகலருக்கும் அனுப்பிவைக்கப்படும் எனவும் ஒய்வூதியப் பிரிவு தெரிவித்துள்ளது. (66)

## நீர்வை முருகனுக்கு கர்ப்பூர தீபத் திருவிழா

இன்று நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் பெருமானுக்கு 1008 சங்குகளால்அபிஷேகமும் மாலையில் மணவாளக்கோல கர்ப்பூர தீபவிழாவும் நடைபெறும்.

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார்வீதி, 'லக்ஷ்மிபில்டிங்கில்' உள்ள அச்சகத்தில் 22-01-1991இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.